# நாஞ்சில் மலர்

NANCHIL MALAR

மலர் : 10 இதழ் : 8 நாஞ்சில் மலர் ஜூன் 2020

VOLUME : 10 ISSUE: 8 NANCHIL MALAR JUNE 2020

விலை : ₹20/-வருடச் சந்தா: ₹.200/- Annual Subscription ₹ 200/-

---

திறமைமிக்க மருத்துவர்களால்
உருவாக்கப் பெற்ற சென்னை

## சூர்யா மருத்துவமனை!



டாக்டர் C. P. ஸ்ரீகுமார்

எலும்பு முறிவு மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்று விளங்கும் டாக்டர் C.P.ஸ்ரீகுமார் அவர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பல்நோக்கு மருத்துவமனை வளர்ந்தோங்கி சமுதாயப் பணியாற்ற வாழ்த்துகிறோம்.!

*Dr. C.P. Sreekumar returned from England after training in Orthopedic Surgery.*

*Dr. Sreekumar is a respected and trusted Orthopedic surgeon and performs all kinds of Orthopedic surgeries everyday.*

*His years of experience doing Orthopedic surgeries has enabled him to perform the most complex surgery with ease. Patients coming to Sooriya Hospital or Chennai many time insist that he operate them.*

*•As the Head of the Orthopedics Department, he inspires his team to scale new heights in performance and patient care*

***•Dr. C.P. Sreekumar has been awarded the Rajiv Gandhi award for his achievements.***



***Dr. Sooriyakala Sreekumar***

*is the dedicated and enthusiastic Head of the Obstetrics & Gynecology Department at Sooriya Hospitals. Enriched by her work exposure in the United Kingdom, she has been infusing the Department with several innovative ideas.*

*Her programs for pre-natal patient care are very popular with expectant mothers. She has been instrumental for establishing the yoga center which has enabled healthier mothers and easier child births.*

*She has been closely involved in building an exclusive and world class neo-natal centre - the best in Chennai- for new-borns who need special care, enabling the survival of more and more babies. She has been pro-actively supporting her husband Dr.Sreekumar in realizing his vision for Sooriya Hospitals.*

# நாஞ்சில் மலர்

மலர் : 10 இதழ் : 8 ஜூன் 2020

VOLUME : 10 ISSUE : 8 NANCHIL MALAR JUNE 2020


------------------------------------------------------------------


பதிப்பாசிரியர்: : கி. தானப்பன்

ஆசிரியர் : கி. கண்ணன் துணையாசிரியர்: மு. கோபி

இதழ் வடிவமைப்பு மற்றும் அச்சிடுபவர் : ப. இளங்கோ

------------------------------------------------------------------

ஆசிரியர் குழு: பெ .சாஸ்தாங்குட்டி பிள்ளை, என்.பொன்னுசுவாமி ,
' நாஞ்சில் கொண்டான்' எஸ். சரவணன், முனைவர். சி. உதயகுமார்,
P. வேலப்பன், நா.சேகர்

------------------------------------------------------------------

ஒருங்கிணைப்பாளர்கள்: தியாகி. தெ. வே. பகவதிப் பெருமாள் ,
சுந்தர் சுப்பிரமணியம், எஸ். கிருஷ்ண பிள்ளை

------------------------------------------------------------------

ஆலோசகர்கள் : பி . யோகீசுவரன், மோகன் காந்திராமன்

நிர்வாக இயக்குனர் : A. பூதலிங்கம் பிள்ளை,


*******************************************************

நாஞ்சில் மலருக்கு சந்தா அனுப்ப விரும்புபவர்கள் காசோலை அல்லது வரைவோலையில் 'Nanchil Malar' எனக் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்! வருட சந்தா ரூ.200/-


முகவரி: கி.தானப்பன், பிளாட் எண்: 25, கதவு எண்:10, 2-வது தெரு,
அருள் நகர், மாதவரம் பால்பண்ணை, சென்னை.600 051,
Ph: 044 25552073, 98402 59614 , kt.appan@yahoo.co.in


------------------------------------------------------------------

நாஞ்சில் மலருக்கு சந்தா, நன்கொடை, NEFT மூலம் அனுப்ப விரும்புபவர்கள் , NANCHIL MALAR, Current A/C No. 332901010035895, ( IFSC: UBIN0533297) UNION BANK OF INDIA, MADHAVARAM, CHENNAI 600110 .என்ற முகவரிக்கு அனுப்பி விட்டுத் தங்கள் முகவரியைத் தெரிவிக்கவும்.

------------------------------------------------------------------


நாஞ்சில் மலரில் வாசக அன்பர்களால் எழுதப் பெற்று வெளிவரும் கட்டுரைகள், கருத்துக்கள், தகவல்கள் அனைத்தும் அவர்களது சொந்தக் கருத்துக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்

# முனைவர் பி. யோகீசுவரன்



***என் எண்ண ஓட்டத்தில் பழைய நினைவுகள் என்ற தலைப்பில் எழுதிவந்த நான்***
***'கண்ணன் பாட்டில் உலகியல்'*** *என்ற என் நூலின் சுருக்கத்தை நாஞ்சில் மலரில் எழுதி வரும் போது வேறு வேறு நிகழ்வுகளைப் பதிவு செய்யும் நிலை ஏற்பட்டது.*

*கண்ணன் பாட்டிற்கு வருகிறேன்... கண்ணனை மனித உறவுகளில் கொண்டு நிறுத்தி உலகியல் வாழ்விற்கு வழி சொல்லித் தருகிறார் பாரதியார். அந்த உறவுகளில் " தோழன் " என்ற வாழ்வியல் பாத்திரத்தை அவர் வழி நின்று மீள் பதிப்பாகத் தருகின்றேன்.*

***கண்ணன் என் தோழன்***

*மனித உறவுகளில் தோழமைக்குத் தனியானதொரு மகத்துவம் உண்டு. தாய் தந்தை போன்ற உறவுகள் பிறப்பால் பெருகி வருவன. தான் பெற்ற பிள்ளை என்பதால் பிள்ளைபால் பாசங் கொள்வதும் பரிவு காட்டுவதும் தொடர்பினால் கனியும் அன்புருக்கமேயாகும். காதல் உணர்வும் உள்ள உணர்வோடு உடல் உணர்வாலும் வலுப்பெறுவதேயாகும். இத்தகைய சுற்றுச் சார்புகளின்றி நெஞ்சம் நெக்குருகி ஒன்றிய உணர்வால் இதயங்கள் கலந்து நிற்றல் தோழமைக்கேயுரிய தனிப் பெருமையாகும். தோழமையின்ஆழத்தினை அகப்பாடல் தோழிகள் வழிப் படைத்துக் காட்டினர் சங்கச் சான்றோர்.*

*நெஞ்சத் துணையாகப் இறைவனைப் பாடுகின்றார் அப்பர். ஆனால் அவனைத் தோழனாகக் கருதியழைத்தவர் சுந்தரர். தான் செய்த துரிசுகளுக்கும் காதல் இன்பத்திற்கும் இறைவன் தோழனாகத் துணை நின்றதை*

*தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக் குடனாகி*
*மாழை ஒண்கண் பரவையைத் தந்தாண்டானை*
*என்று பாடுகின்றார் சுந்தரர்.*

*தேவாரச் செல்வர் சுந்தரர் பால் சேரமான் பெருமாள் கொண்ட நட்பினை பெரிய புராணம் விவரிக்கிறது. பார்த்தனுக்கும் கண்ணனுக்கும் இருந்த நட்பினைப் பாரதம் பரிந்துரைக்கிறது. தோழமையின் ஆழத்தைத் துலங்க வைக்கும் கண்ணன் - அர்ச்சுனன் நட்பினை உளங்கொண்ட பாரதி தன்னை அர்ச்சுனனாகவே பாவித்துக் கொண்டார். வீரனான அர்ச்சுனன் போல் தன்னைப் பாவித்துக் கொள்வதில் பாரதிக்கு அளப்பரிய ஆர்வம். அந்த ஆர்வ மேலீட்டால் கண்ணனைத் தோழனாகக் கண்ட அவர் உள்ளம் அத்தோழமைக்கு முதலிடம் தந்ததில் வியப்பில்லை.*

*தமிழிலக்கியப் பரப்பில் தோழமையின் தூய்மை காட்டும் சான்றுகள் பரக்கக்கிடக்கின்றன. கபிலரும் பாரியும் கொண்ட நட்பும் ஔவையாரும் அதியமானும் கொண்ட நட்பும் சங்கத்தின் சாறாக விளங்கும் பண்பாட்டின் உயர்நிலை ஊற்றுக்கள். வள்ளுவர் வரைந்து காட்டிய*

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்.*

*என்ற நட்பிலக்கணத்திற்கு வாழ்வியல் வரைவிலக்கியம் பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன் வரலாறு. தோழமை என்ற சொல்லுக்குப் புதிய மெருகூட்டியவர் கம்பர்.*

*தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ*
*என்று கங்கை வேடன் கூற்றினைக் களிப்புறப் பாடினார் கம்ப நாடர்.*

*உலக சகோதரத்துவத்துக்கு இந்த நூற்றாண்டில் வித்தாக விளங்கிய மாவீரன் லெனின் தன் சக அன்பர்களைத் தோழர்களே ( Comarades) என்றே அழைத்தார்.*

*தோழமையின் தொன்மைப் பெருமையை மனங்கொண்டவர் பாரதி. அவர் படைத்துக் காட்டும் தோழன் உம்பர் வாழ்வையுடையை கண்ணன் ஆயினும் உலகியல் வாழ்விற்குக் கொண்டு நிறுத்தப் படு கிறான். பாரதத்தில் நாயகனாக விளங்கும் அர்ச்சுனனின் அன்பன் ஆயினும் அகிலமெங்கும் தூயோனாய்ப் பாரதியின் கை வண்ணத்தில்*

*புதுக்கோலம் புனைந்து நிற்கின்றான்.*

*காதலும் வீரமும் மனித சமுதாயத்தை இயக்கும் மாபெரும் சக்திகள். குறை நட்பு இவற்றில் பிறழும்; நிறை நட்பு இவற்றினைப் பெருக்கும். கண்ணனின் தங்கையோடு உடன் போக்கு நிகழ்த்த நினைந்தாலும் நட்பின் நலன் கெடாது துணை நிற்கும் தொண்டன் அவன்.*

*பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்*
*புறங்கொண்டு போவதற்கே - இனி*
*என்ன வழி என்று கேட்கில் உபாயம்*
*இருகணத் தேயுரைப்பான்.*

*இவ்வாறு காதலுக்கு இருகண நேரத்தில் துணை செய்யும் கண்ணன், வீரத்திற்கு ஒரு கண நேரத்திலேயே உபாயம் நல்குவான்.*

*கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்*
*காணும் வழியொன்றி லேன் - வந்திங்கு*
*உன்னையடைந்தனன் என்னில், உபாயம்*
*ஒருகணத் தேயுரைப் பான்.*
*என்பது பாரதி வாக்கு*

*உடலும் உள்ளமும் துன்புறுகின்ற பொழுது அதனை இன்புறுத்த மருத்துவனாகவும் மனவியல் நிபுணனாகவும் நின்று துணை செய்வான் கண்ணன். கண்ணனின் நட்புக் கோட்டையை நண்ணுவோர் பிழைக்கவும் உழைக்கவும் வழி காண்பதோடன்றி வையகத்தில் அதன் பயனைத் துய்க்கவும் வழி காண்பர் என்பது பாரதியின் கருத்து.*

*பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென்றா லொரு*
*பேச்சினிலே சொல்லுவான்;*
*உழைக்கும்வழி வினையாளும்வழி பயன்*
*உண்ணும் வழியுரைப்பான்.*

*சுரண்டும் வர்க்கத்திற்குப் பாரதி விடுத்த ஒரு எச்சரிக்கையாக இப்பாடல் நலன் செய்து நிற்கிறது. மழைக்குக் குடையாகவும், பசிக்கு உணவாகவும் உலகியல் வாழ்விற்கு உற்ற துணையாகவும் கண்ணன் வந்து உதவி நிற்பான்.*

*"உள்ளுவாருள்ளிற்றெல்லாம்" உடனிருந்துதவும் கண்ணன் இயல்பினைத் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடினார். அதனை உளங்கொண்ட பாரதி.*

*நாட்டத்திற்கொண்ட குறிப்பினை இஃதென்று*
*நான் சொல்லுமுன் உணர்வான்.*
*எனப் பகர்கின்றார்.*

*நல்ல நண்பன், தன்நண்பனுக்குக் கருவம் நெஞ்சில் நிறைகிறபோது அதைக்கிள்ளி எறிகிற மருத்துவன் ஆவான். இதனைத் திருவள்ளுவர்,*

*நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற் பொருட்டு*
*என விளக்கினார்.*

*வள்ளுவம் அறிந்த பாரதி, கண்ணனை இலக்கியமாக்கிக் காட்டுகின்றார்.*

*உள்ளத்திலே கருவங்கொண்ட போதினில்*
*ஓங்கியடித்திடுவான்; - நெஞ்சில்*
*கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு*
*காறி யுமிழ்ந்திடுவான்; சிறு*
*பள்ளத்திலே நெடுநாளழு குங்கெட்ட*
*பாசியை யெற்றிவிடும் - பெரு*
*வெள்ளத்தைப் போலருள் வார்த்தைகள் சொல்லி*
*மெலிவு தவிர்த்திடுவான் (தொடரும்)*



## இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காமா அம்மையார்

(தொகுப்பு: ஜெய்ஹிந்த் செண்பகராமன் அவர்களின் பேரன் பொ. சேதுசேஷன்) சென்ற இதழ்த் தொடர்ச்சி......

**காமா** அம்மையாருக்கு, இத்தாலியில் சிகிற்சை முடிந்த பிறகு, அவரது வாழ்க்கையில் நடந்த மற்ற நிகழ்வுகளை இப்போது காண்போம். ரோம் மருத்துவமனையிலிருந்து அவர் அனுப்பப்பட்டாலும் ஒரு மூன்று மாத காலத்திற்கு, வெளிநோயாளியாக, தினமும் மருத்துவமனைக்கு வந்து செல்லுமாறு அறிவுறுப்படுத்தபட்டிருந்தார். அதன்படி அம்மையார், அந்த பார்ஸி நண்பர் வீட்டில் தங்கி தன்மருத்துவ சிகிற்சை கள் அனைத்தையும் முடித்துக்கொண்டார். அதன்பிறகு, மருத்துவர்கள், ஆலோசனைப்படி சுமார் இரண்டரை ஆண்டுகள் ஜெர்மனி பிரான்ஸ், ஸ்காட்லாண்ட் நாடுகளில் உள்ள நகர்களில் நண்பர்கள் மற்றும் தூரத்து உறவினர்கள் வீட்டில் தங்கி ஓய்வு எடுத்து தன் தேக ஆரோக்கியத்தை வளர்த்துக் கொண்டார்.

காமா அம்மையார் இத்தாலியில் சிகிற்சை முடிந்து, லண்டனில் மேல்படிப்பிற்குத்தானே, அவருடைய பெற்றோர்கள் அனுப்பி வைத்தார்கள்?. அப்படி இருக்கும்போது ஏன் அம்மையார் அவர்கள், சுமார் **3** வருட காலம் ஐரோப்பிய நாடுகளில் ஓய்வு எடுத்து வந்தார் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் தோன்றும்.

*ஆம் அதற்கான காரணம், இந்தியாவில் "ரேண்டு லெப்ஃடினட் அஸ்ர்ஸ்ட்டு' கொலை வழக்கில் காவல் துறை அவரைக் குற்றவாளியாக பதிவு செய்திருந்தது. அப்பொழுது அவரது தகப்பனாரும், மாமனாரும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அவரைக் காப்பற்றியிருந்தாலும், அந்தப் பதிவால், லண்டனில் அவருக்கு, எந்த பல்கலை கழகமும் இடம் அளிக்கவில்லை. லண்டனில் உள்ள செல்வாக்கான நெருங்கிய உறவினர்கள் முயற்சித்து ஒரு பல்கலை கழகத்தில் இடம், பெற்ற போது, அந்தக் கல்லூரி, காமா அம்மையாரிடமிருந்து, அவர் செயல்களுக்காக வருத்தம் தெரிவிப்பதோடு, இனி இம்மாதிரியான போராட்டங்களில் பங்கேற்க மாட்டேன் என்ற உறுதி பத்திரம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். ஆனால் நமது காமா அம்மையார் அந்த நிபந்தனையை ஏற்க மறுத்துவிட்டார். எனவேதான், அவரால் லண்டனில் தன் மேல் படிப்பைத் தொடர முடியவில்லை. அதேபோல், இந்தியா திரும்புவதற்கும், ஆங்கில அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை. இதுவே அவர் ஐரோப்பா நாடுகளில் அந்த மூன்று வருடங்கள் காலம் கழித்தார்.*

*அந்த மூன்று வருட காலகட்டத்தில் ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி நாடுகளில் உள்ள பல்வேறு கல்லூரிகளில், அந்நாட்டின் மூன்று மொழிகளையும் கற்றறிந்தார். இந்த மொழிகளில் கவிதை எழுதும் அளவிற்கு பாண்டித்துவம் பெற்றார் என்பது மறுக்க முடியாத உண்மை.. மேலும் தன்னை முழுமையாக*

ஈடுபடுத்திக் கொண்டது அவர் சார்ந்திருந்த ஜொராஸ்டிரியன் **(Zoroasterian)** மதச்சடங்குகளில். ஆம் ஸ்காட்லாண்டில் ஒரு மதகுரு, அவருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் தங்கள் மதத்தின் பெருமைகளை எடுத்துக்கூறி, காமா அம்மையாரை ஒரு முழுமையான ஜொராஸ்டிரியன் மதவாதியாக மாற்றிவிட்டார்.

ஜொராஸ்டிரியன் மத வழக்கப்படி, அவர்கள், வெள்ளை நிற மெல்லிய பருத்தி அல்லது மஸ்லின் ஆடையை தங்கள் உடம்பு முற்றிலும் மறைக்கும் படியான உள்ளாடையாக அணிவார்கள். அதன் பெயர் ஸூத்ரா. **Sudra** அந்த ஆடையின் அடிபாகத்தில் ஒரு சதுர அங்குலம் அளவிற்காக ஒரு சிறிய பாக்கெட் தைக்கப்பட்டிருக்கும். அதன் உள் அர்த்தம் என்ன வென்றால், "நீ இந்த பரந்த உலகில் எவ்வளவு பெரிய மனிதனாக வலம் வந்தாலும் உன்னுடைய உள்ளாடை அடியில் தைக்கப்பட்டிருக்கும், 'பாக்கட்' நிரம்பும் அளவிற்காகவாது நீ நல்லதையே நினைக்க வேண்டும், பேச வேண்டும், செயலாற்ற வேண்டும்" என்று உணர்த்திக் கொண்டிருக்கிறது. அடுத்தாக, 72 இழைகளோடு கூடி புனித நூலை உடம்பில் அணிவது 72 இழையும் அவர்கள் மத நூலில் உள்ள 72 அதிகாரங்களை குறிப்பிடுவன. இந்த நூலை அவர்கள் "குஸ்டி" **(Kusti)** என்று அழைப்பார்கள். இந்த நூல், அவர்கள் மதத்தில் பல்வேறு பிரார்த்தனைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு

*முதன்மையான மதஸ்தானத்தில் இருப்பவர்களால் பின்னப்படுவதாகும். இந்நூலை அந்த மதத்தில் உள்ள ஒவ்வாரு ஆணும், பெண்ணும் "ஸூத்ரா" (Sudra) எனப்படும் உள்ளாடைக்கும் மேலே தங்கள் இடுப்பை **3** முறை சுற்றி தங்கள் முன்பக்கத்திலும், பின் பக்கத்திலும் முடிச்சு போட வேண்டும். தினமும், ஒவ்வாரு பார்ஸியும் தங்கள் பிரார்த்தனையின் போது அந்த நூலை (Kusti) அவிழ்த்து பின்பு பழையபடி முடிச்சு போட்டு தங்கள் பிரார்த்தனை களை முடித்துக்கொள்ள வேண்டும்.*

*ஆக அந்த மூன்று வருட காலகட்டத்தில் அவர்தன் வாழ்க்கையைப் பல புரட்சிகரமான எண்ணங்களோடு அணுகினாலும், தன்மதக் கோட்பாடுகளை தவறாமல் கடைப் பிடித்து வந்தார். அதாவது அம்மையாரை மேலே குறிப்பிட்டுள்ள, தூய வெள்ளை உள்ளாடை (**Sudra)** மற்றும் பிரார்த்தனை க்கு உட்பட்ட, மத நூல் இல்லாமல் பார்க்க இயலாது; அது மட்டுமில்லாமல் மத நீதி நூலான **(Khordeh Avesta)** என்ற ஒரு சிறிய புத்தகம் அவருடைய கைப்பையில் எப்போதும் இருக்கும்.*

*இவ்வாறாக, தன்னுடைய ஓய்வு காலத்தை முழுமையாக முடித்துக்கொண்டு **19 05**, ஆம் ஆண்டு, லண்டன் வந்து சேர்ந்தார். இந்த மூன்றாண்டுகளில் அவர் பல இடங்களுக்குச் சென்று பல பெரியவர்களுடைய*

*தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதோடு, அவர் வருங்காலத்தில், ஒரு பெரிய திறமை வாய்ந்த அரசியல்வாதியாக உருவாவதற்குத் தன்னைத் தயார்படுத் திக் கொண்டார்*

*அப்போதெல்லாம், லண்டினில் "ஹைட் பூங்கா"* **(Hyde Park)** *என்ற பகுதியில் மாலைபொழுதில், பலவிதமான பொதுக்கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். .இங்கிலாந்தில் அப்போது நடைமுறையிலிருந்த பேச்சு சுதந்திரத்திற்கு எடுத்துக்காட்டாக, பல தரப்பட்ட வெளிநாட்டு பேச்சாளர்கள் தங்கள் நாட்டைப் பற்றியும் அவ்வப்போது, அவர்களது சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும் "இலை மறைவு காயாக" எடுத்துக்கூறுவார்கள். லண்டனில் இருந்த இந்திய போராட்ட வீரர்களும், இந்த கூட்டத்தில் பேசுவதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கு பெரும் தலைவர்கள் பேசுவது வெகு அபூர்வம்.. எனவே இங்கு கூட்டத்தில் பேசுவர்களை "சோப்பு டப்பா" பேச்சாளர்கள் (Soap Box -Orators) என்றழைப்பார்கள். பார்வையாளர்களும், அங்கு அமர்ந்து, பேச்சைக் கவனிக்காமல், ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக நின்று கவனிப்பார்கள். சிறிது நேரத்தில் அங்கிருந்தும் அகன்று விடுவார்கள். ஆனால், நமது "காமாஅம்மையார்" உள்ளூர் இந்திய நண்பர்களின் வேண்டுகோளின்படி*

*சிலநாட்கள் அங்கு பேச துவங்கினார். என்னை ஆச்சர்யம் என்றால், அவருடைய சரளமான பேச்சுத்திறனால் மக்கள் அந்த இடத்தைவிட்டு அகலாமல், ஏதோ மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் அவர் பேச்சு முடியும் வரை அமர்ந்து கைத்தட்டிவரவேற்றார்கள். ஒரு பர்தா* **(Purdash)** *போட்ட நடுத்தர வயது இந்திய பெண்மணி, எவ்வளவு இனிமையாகவும், அதே நேரத்தில் ஆணித்தரமாகவும் பேசுகிறார் என்று லண்டன் இந்திய மக்கள் அந்த "ஹைட் பூங்கா" பகுதிக்கு கூட்டம் கூட்டாக வரத்துவங்கினார்கள்*

*லண்டனில், இந்திய பெருந்தலைவரும், காமா குடும்பத்திற்கு நெருங்கிய உறவினருமான, திரு.தாதாபாய் நௌரோஜி அவர்களைச் சந்தித்து, அவர் மேற்பார்வையில் ஒரு சிறு அறையில் காமா அம்மையார் தங்கி வந்தார்.. தினமும் நௌரோஜி அலுவலகத்திற்குச் சென்று அவருக்காக, உலகத்தலைவர்களுக்கு, கடிதம் எழுதுவது, கடிதங்களை "டைப்" (Type) செய்வது போன்ற பல உதவிகளை செய்து வந்தார். ஆனால் லண்டனில் தங்குவதற்கான சரியான வசதிகள் அமையாததால் லண்டனில் ஒரு காலும், பாரீஸ் (பிரான்ஸ் நாடு) நகரில் ஒரு காலுமாக நாட்களை கடத்தி வந்தார். பாரீஸில் சுதந்திரப் போராட்ட வீரர் சர்தார் சிங் ராணா அவர்களின் மனைவி, அவர்களின் வேலை காரணமாக, ஒரு பெரிய விட்டில் தங்கியிருந்ததாலும் அவருக்கும், காமா அம்மையாருக்கும், இருந்த நல்ல நட்பாலும் காமா அம்மையார் பாரீஸ் நகரில் இருப்பதைப் பெரிதும் விரும்பினார். ஆனால் அவருக்கு மாதம் தோறும் ஒரு*

தொகை இந்தியாவிலிருந்து தந்தையாரால் லண்டன் வங்கியில், காமா அம்மையாருக்குச் செலுத்தப்படுவதால், அவர் அவ்வப்போது லண்டன் வருவது, வாடிக்கையாயிற்று.. மேலும், “தாதாபாய் நௌரோஜி” அவரைத்தன் அந்தரங்க உதவியாளராக **(Personal Secretary)** அமர்த்திக் கொண்டார். அந்தகாலகட்டத்தில் “காமா அம்மையார்” தாதாபாய் நௌரோஜி அவர்களுக்கு பாரீஸிலிருந்து ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்தின் தமிழாக்கத்தை கீழே காண்போம்..

'அன்புள்ள தாதாபாய், 25-12-1905 அன்று வெளிவந்த பம்பாய் தினசரி ஒன்றின் மூலம் உங்கள் பேத்தி லண்டன் வருவதை தெரிந்துகொண்டேன்.. தயவு செய்து நான் அவர்களுடன், லண்டனில் தங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்வீர்கள் என நம்புகிறேன் நான் அதற்கான வாடகையாக, நீங்கள் குறிப்பிடும் தொகையை செலுத்துவதற்கு தயாராக இருக்கிறேன். இந்த ஏற்பாட்டால் நம்மிருவரும் சேர்ந்து பணியாற்றுவதற்கு பெரிதும் உதவியாக இருக்குமென நம்புகிறேன். மேலும் திரு.ஓவன்(Mr.Own)) அறிவுரைப்படி உங்களுடைய தேர்தல் பிரச்சாரத்தை, புதுவருட பிறப்பன்று ஆரம்பிக்க வேண்டும்.. அச்சமயத்தில் நானும் அங்கிருக்க ஆசைப் படுகிறேன். எனக்குத் தங்கள் அலுவலக அருகில் **(வேடலேம்பெத்)** (North Lombeth)தங்க அறை கிடைப்பது ரொம்ப அரிதாக உள்ளது. எனவே தயவு செய்து தங்கள் பேத்திகள் தங்கும் வீட்டில் எனக்கு ஒரு அறை ஒதுக்கி உதவுங்கள். அதன்பிறகு 28 ஆம் தேதி

*லண்டன் புறப்பட்டு வருகிறேன்." என்று முடித்திருக்கிறார்.*

*இப்போது இந்தியப்பெரும் தலைவர் தாதாபாய், நௌரோஜியைப்பற்றி சிறிது தெரிந்துக்கொள்வோம். 1892 ஆம் ஆண்டு முதல் 1895 ஆம் ஆண்டுவரை இங்கிலாந்து மக்கள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர். மேலும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைத் தோற்றுவித்தவர்களில் ஒரு முக்கியமானவர். மேலும் அந்த கட்சியின் தலைவராக, மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதாவது 1886,1895-ஆண்டு தலைவராக பணியாற்றிய இவர் 1906 ஆம் ஆண்டு போட்டியிட்ட போது அவருக்கு எதிராக பலர் போட்டியிட்டனர். இந்த காலக்கட்டத்தில் தான் நமது காமாஅம்மையார் தன் உடல்நலத்தை பாராமல், பல இடங்களுக்குச்சென்று, பலரைச்சந்தித்து "தாதாபாய்" அவர்களுக்கு வெற்றியைத்தேடி தந்துள்ளார்.*

*தாதாபாய் நௌரோஜி மூலம் பல முக்கிய இந்தியத் தலைவர்கள், நமது காமா அம்மையாருக்கு அறிமுகம் ஆனார்கள். அதில் முக்கியமானவர்கள், லண்டனில் புகழ்பெற்ற, சட்டக்கல்லூரி **[Inner Temple of Inns Court)** மாணவரான சர்தார் சிங் ராணா மற்றும் ஸ்யாம்ஜி கிருஷ்ணவர்மா**( Mr. Shyamji Krishna Varma).**இவர்களின் தொடர்பால் தான் அடுத்த ஒன்பது ஆண்டுகளில் (**1905-1914)** காமா அம்மையார் ஒரு புரட்சிகரமான இந்திய சுதந்திரப் போராட்டக்காரியாக உருவெடுத்தார். அந்தக்*

*காலக்கட்டத்தில், இந்திய சுதந்திரத்திற்காக, லண்டன் பாரீஸ், ஜெனிபா மற்றும் பெர்லின் நகர்களில் அம்மையார் சிங்கம்போல் கர்ஜித்த சொற்பொழிவுகள், உலகம் முழுவதும் எதிரொலித்தது.*

*அந்தக்காலக்கட்டத்தில் இந்தியாவிலிருந்து மேல் படிப்புக்காக, லண்டன் செல்லும் இந்திய மாணவர்கள் தங்குவதற்கு வசதியான அறைகள் கிடைக்கவில்லை. அப்போதெல்லாம் கல்லூரி பல்கலை கழகங்களில் தங்கி படிப்பதற்கான விடுதி வசதிகள் அவ்வளவாக இல்லை. விடுதியில் உள்ள சொற்ப அறைகளும் மிகுந்த வசதி படைத்தவர்களே தங்கியிருந்து படித்து வந்தார்கள். எனவே தாதாபாய் நௌரோஜி, ஸ்யாம்ஜி கிருஷ்ணவர்மா, ஆகிய இருவரும் லஜ்பத்ராய்* ***(Lajpat Rai)*** *ஆலோசனைப் படி இந்திய மாணவர்கள் தங்கிப்படிப்ப தற்காக வட லண்டனில் கிரோம் வெல் நிழற்சாலை* ***Chronwell Avenue(High Gate)*** *என்ற இடத்தில் "இந்திய இல்லம்"* ***(India House)*** *என்ற கட்டிடத்தைக் கட்டி முடித்தார் ஸ்யாம்ஜி கிருஷ்ணவர்மா. லண்டனில் பிரபலமான வக்கீல் என்பதால், தன் வருமானத்தின் பெரும் பகுதியை இந்தக் கட்டிடம் கட்டுவதற்காக செலவழித்தார். மேலும் நௌரோஜி அவர்களும் லஜ்பத்ராய் அவர்களும், பல இந்திய நண்பர்களிடமிருந்து நன்கொடை பெற்று கட்டிடத்தை குறுகிய காலத்தில் கட்டி முடிக்க உதவி செய்தார்கள்.*

***1905*** *ஆம் ஆண்டு ஜூலை மாதம்* ***1*** *ஆம் தேதி, இந்தியா இல்லம்* ***(India House)*** *பல இந்திய மற்றும் ஆங்கில முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் முக்கியமான தலைவர்கள் திரு.ஹிண்ட்மேன் (Hyndman)சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் (****Social Democratic Fedaration****) திரு.ஸ்வைனி (Mr.Swiny) முற்போக்கு கட்சி தலைவர்* ***(Prostivist Society)*** *திரு.குல்ச் (Quelch), நீதி என்ற தினசரியின் ஆசிரியர்* ***(Editor of Justice)*** *திருமதி.தேஷ்பார்டு* ***(Madame Despard)****ஐரிஸ் நாடு மக்கள் சபை உறுப்பினர் மற்றும் இந்திய தலைவர் தாதாபாய் நௌரோஜி , லாஜ்பத்ராய், காமா அம்மையார், திரு.ஹன்ஸ்ராஜ் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். அந்த விழா, ஸ்யாம்ஜி கிருஷ்ணவர்மா அவர்களின் வரவேற்பு உரையுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியா இல்லத்தை ஆரம்பித்து வைத்து திரு.ஹிண்ட்மேன் ஆற்றிய உரை மறக்க முடியாத, சரித்திரப்புகழ் பெற்ற உரையை அடுத்த இதழில் காண்போம்!*

***'ஜெய்ஹிந்த் ' செண்பகராமன்பிள்ளை அவர்களின்***
***பேரன் பொ. சேதுசேஷன்***

***தொடரும்....***

# தமிழ்த் திருமணமுறை

*சென்ற இதழ்த் தொடர்ச்சி....*

### காப்புக் களைதல்

*திருமணம் முடிந்த பின்னர் கட்டிய மஞ்சள் பூசிய தேங்காயின் மேல் கையை வைக்கச் செய்து முன்பு சேர்க்கப்பட்டமஞ்சள் நூல் கயிற்றினை அவிழ்த்திடச் செய்தல் வேண்டும். அந்த நேரத்திலேயே அரசங்கி ளையில் கட்டிய மஞ்சள் கயிற்றினையும் அவிழ்த்து விடுதல் வேண்டும். இந்நிகழ்ச்சிகளின் போது தும்மல் இருமல் முதலியன கேளாமல் இருத்தல் பொருட்டு மேளம் கொட்டுதல் வேண்டும்.*

### பந்தற்கால் நடுதல்

*தமிழ் முறைப்படி திருமணம் செய்து கொள்பவர்கள் இந்தச்சடங்கைச் செய்வதற்கு ஆசிரியர் உதவியை நாட வேண்டிய தில்லை. மங்கள மகளிர் ஐவர் ஒன்று கூடிப் பந்தற்கால்களில் வட கிழக்கு மூலையில் நடவேண்டிய ஒன்றுக்கு மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, மலர் சூடி, மேளதாள முலூரக்கத்துடன் அந்தக் கம்பத்தைக் குழியில் நடலாம். ஆசிரியரும் உடனிருந்து நிகழ்த்த வேண்டும் என்று விரும்பினால் ஆசிரியரையும் சேர்த்துக் கொள்ளலாம்.*

*ஆசிரியர் இறைவழிபாடு செய்து மஞ்சள் கலந்த அரிசியைப் பரப்பிய தலை வாழையிலையின் மீது கலசம் நிறுத்தி, அந்தக் கலசத்திற்கு வழிபாடாற்றிக் கலசத்திலுள்ள நீரினைக் கொண்டு பந்தற்காலினைக் கழுவும் படி செய்வர்.*

*இந்த நிகழ்ச்சியை அவரவர் பழக்க வழக்கங்களுக்கேற்ப பெரியோர் கருத்தறிந்து செய்தல் நலம்.*

### உறுதி செய்தல்

*இது திருமணம் நிகழ்வதற்கு முன்னர் மணமகள் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சியாகும். மணமகனுக்கு உரியோர் ஒரு நல்ல நாளில் உற்றார் உறவினர் முன்னிலையில் ஒருவருக்கொருவர் உறுதி கூறிக்கொள்வது மரபு. பெண் வீட்டார் தம் பெண்ணைக் குறித்த மணமகனுக்குத் தருவதாகவும், அவ்வாறே அம்மணமகன் வீட்டார் மணமகனுக்கு வாழ்க்கைத் துணையாகக் குறித்த ஒரு பெண்ணை ஏற்றுக் கொள்வதாகவும் ஒருவருக்கொருவர் எழுத்து மூலமாகவும் ஆசிரியர் முன்னிலையில் சுற்றத்தார்கள், நண்பர்கள் சான்றாக விளங்க உறுதி*

செய்து கொள்ள வேண்டும்.

**திருமணம் செய்யத்தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள்**

1. மஞ்சள் பொடி
2. குங்குமம், திருநீறு
3. சந்தனம்
4. பூச்சரம் 10 முழம்
5. வெற்றிலை பாக்கு
6. வாழைப்பழம் - மூன்று
7. தேங்காய் - மூன்று
8. கற்பூரம்
9. சாம்பிராணி
10. ஊதுவத்தி
11. தலைவாழையிலை - மூன்று
12. பச்சரிசி உழக்கு
13. மாவிலைக்கொத்து
14. குத்துவிளக்கு இரண்டு
15. திரிநூல்
16. நூல் கண்டு
17. நெய்
18. நெற்பொரி
19. பூமாலை
20. பொற்றாலி
21. மணமகளுக்குப் புத்தாடை
22. சமித்து
23. மோதிரம்
24. மங்கலவாத்தியம்
25. பெரியதட்டு - இரண்டு
26. சிறியதட்டு - ஒன்று
27. ஆசனப்பலகை - இரண்டு
28. வெல்லம்
29. செம்பு - இரண்டு

30. முக்காலி
31. முழுமஞ்சள் - மூன்று

## தமிழ்த் திருமணநிகழ்ச்சிகள்

1. இறைவழிபாடு *
2. கால் நடுதல்
3. கும்பபூசை
4. மணமக்களுக்கு ஆடை வழங்குதல் *
5. காப்பு அணிதல் *
6. பெற்றோர் வழிபாடு *
7. மகட் கொடை நேர்தல் *
8. செந்தீ வேட்டல் *
9. மங்கல நாண் வழிபாடு
10. மணமக்கள் உறுதிமாழி
11. மங்கல நாண் அணிதல்
12. பொட்டு இடுதல்
13. மாலைமாற்றல்*
14. பட்டம் கட்டுதல்
15. மணமக்கள் செந்தீ வலம் வருதல் *
16. வாழ்த்துரை
17. கண்ணேறுகழித்தல்
18. மணமக்கள் மணவறையை விட்டு எழுந்து வேற்றிடஞ் சென்று அமர்தல், பால் பழம் உண்டல்
19. காப்புக் களைதல் *

குறிப்பு : சுருக்கமாகத் தமிழ்த் திருமணம் செய்ய விரும்புபவர்கள்
* இக்குறியிட்டுள்ள நிகழ்ச்சிகளை மட்டும் பின்பற்றலாம்

## தமிழ்த் திருமண நிகழ்ச்சிகளும் பொருத்தமான மந்திரப் பாடல்களும்

### வலப்பக்க கும்ப வழிபாடு

*அறுவகை சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்வேறாம்*
*குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்கு*
*அறிவினில் அருளால் மன்னி அம்மையோடு அப்பனாகிச்*
*செறிலவாழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.*
*உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்*
*நிலவு லாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்*
*மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.*

### இறைவி வழிபாடு

*இடப்பக்கக் கும்பவழிபாடு*
*தையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை*
*மையலை நோக்கும் மனோன்மணி மங்கையைப்*
*பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்*
*வெ யய் பவமினி மேவ கிலாவே.*

### மணமக்களுக்கு ஆடை வழங்குதல்

#### மணமகனுக்கு ஆடை அளித்தல்

*ஒரு தட்டில் புத்தாடை, பூ, வெற்றிலைபாக்கு இவைகளை வைத்து ஆசிரியர் பின்வரும் திருப்பாடலை ஓதிக்கொண்டு மணமகனுக்குத் தருதல்.*

*போன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்*
*போக மும்திரு வும்புணர்ப் பானைப்,*
*பின்னை என்பிழை யைப்பபொறுப் பானைப்,*
*பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை,*
*இன்ன தன்மையன் என்றறி வொண்ணா*

எம்மா னைஎளி வந்த பிரானை,
அன்னம் வைகும் வயல்பழ னத்தணி
ஆரூ ரானை மறைக்கலு மாமே.

## மணமகளுக்கு ஆடை வழங்குதல்

ஆசிரியர் பின்வரும் பாடலை ஓதிக்கொண்டு மணமகளுக்கு ஆடையை அளித்தல்.

தம்மை யேபுகழ்ந் தீச்சை பேசினும்
சார்பினும் கொண்டர் தருகிலா
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்,
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்,
அம்மை யேசிவ லோக மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

## காப்பணிதல்

ஒரு தட்டில் பச்சரிசி, வெற்றிலை, பாக்கு, மஞ்சள் பூசிய தேங்காய், பழம், மஞ்சள் சேர்க்கப்பட்ட இரண்டு மஞ்சள் நாண் ஆகியவற்றை வைத்தல். திருமணம் தடையின்றி இனிது நடைபெறும் பொருட்டுத் திருவருட்காப்பாக இந்நாணைக் கையில் காட்டுகின்றேன் என்று ஆசிரியர் சொல்லிக்கொண்டு பின்வரும் பாடலை ஓதி மணமகன் வலக்கையில் கட்டுதல்.

## மணமகன் வலக்கையில் கட்டல்

ஓர்வரு கண்க ளிணைக்கயலே உமையவள் கண்கள் இணைக்கயலே
ஏர்மரு வுங்கழ லுகமதே எழில்கொளு தாசன லுகமதே
நீர்வரு கொந்தள கங்கையதே நெடுஞ்சடை மேவிய கங்கையதே
சேர்வரு யோகத் யம்பகனே சிரபுர மேயதி யம்பகனே.

**ஆசிரியர் பின்வரும் பாடலை ஓத மணமகளுக்கு இடக்கையில் மணமகன் காப்புக்கட்டுதல்.**

*ஐந்து கரத்தினை யானை முகத்தினை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை*
*நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.*

*சிறுகதை*



# இலவு காத்த கிளி

*பகவதி மோதிலால் (94460 90272)*

---

தங்கம் பேசினில் கிடந்த பாத்திரங்களை கழுவிக்கொண்டு இருக்கும்பொழுது சமையல் அறைக்கு வந்த மாமியார் ஜானகியம்மாள் "இன்றைக்கும் கமலா வரவில்லையா, அவ வரமாட்டா, இன்றைக்கு செவ்வாய்க்கிழமை வந்தா வீடு துடைக்கணும் அதனால் அவளை நாளைக்கு எதிர் பார்த்தால் போதும்".

தங்கம் "இல்லை அத்தே, அவளுக்கு உடம்பு முடியாம இருக்கலாம், அப்படி ஒன்றும் அதிகம் லீவு எடுக்க மாட்டாள்" என்று பதில் சொன்னாள்.

அதற்கு ஜானகியம்மாள்"வர முடியாவிட்டால் போனில் கூப்பிட்டு சொல்ல வேண்டியதுதானே, அவளுக்கு அந்த பழக்கமே கிடையாது, அவளுக்குத் தெரியும், அவளை விட்டால் வேற ஆளே இல்லை என்று, நீ அவளிடம் ஒன்றும் சொல்ல மாட்டாய், அவளை பார்த்தாலே உனக்கு பயம், உன்னை பார்த்து வச்சிருக்கா" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே காலிங்பெல் அடித்தது.

ஜானகியம்மாள்"போய் கதவைத் திற" என்றதும், தங்கம் கதவைத் திறக்க அழுது வடிந்த முகத்தோடு உள்ளே வந்த கமலா மீதமிருந்த பாத்திரங்களை கழுவிக் கொண்டே "வீட்டில் ஒரே பிரச்சனை, மகன் ரவி ஆட்டோ ஓட்டி கிடைக்கும் பணத்தில் தண்ணியடித்து வந்து பாவம் பொண்டாட்டி சாந்தாவை அடிக்கவும், பிள்ளைகள் அழவும், என் அம்மா

*தலையில் அடித்து ஒப்பாரி வைப்பதுமாக ஒரே களேபரம் ஆகிவிட்டது. நேற்று வேலைக்கு வரலாம் என நினைத்து புறப்படும்போது மீண்டும் அடுத்த சண்டை. மருமகள் சாந்தா வேலைக்கு போய் விட்டு தாமதமாக வந்தால் நீ யார் கூட போனாய்? என்று கேவலமாக பேசி, அவளை அடிப்பான். இப்படி நடக்கும் போது மூத்த பேரன் இனி நான் இங்கு இருக்க மாட்டேன் ஆச்சிவீட்டிற்கு போய் விடுவேன் என்பான். இளையவன் அம்மாவை அப்பா அடித்தால் அவரை நான் திருப்பி அடிப்பேன் என்கிறான் அவனுக்கு அம்மா சாந்தா மீது ரொம்ப பிரியம், அம்மா காலையிலிருந்து வீட்டு வேலைக்கு போய் மாலையில் வந்து இப்படி அடிபடுவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்கிறான்.*

*ரவி ஒரு நாள் வேலைக்கு போனால் ஐந்து நாள் வேலைக்கு போகமாட்டான். பக்கத்து வீட்டு லீலா சொல்வாள் உங்க மகன் தண்ணியடிச்சாலும் வீட்டில் தான் பிரச்சினை பண்ணுவான் ஆனால் எனது மாப்பிள்ளை தண்ணி அடித்து விட்டு ரோட்டில் எங்காவது விழுந்து கிடப்பான். யாரவது வந்து சொல்லி அங்கிருந்து தூக்கிக் கொண்டு வரும் பொழுது அவமானம் புடுங்கி திங்கும், அங்க நிற்கிறவர்கள் பார்க்கிற பார்வையும், சிரிக்கிற சிரிப்பும் சகிக்க முடியாது. ஆரோகியமானவர்களுக்கே ஹார்ட் அட்டாக் வரும் போதும் இந்த மாதிரி ஆளுகளுக்கு ஹார்ட் நல்ல பலமாகதான் இருக்கு. எப்பவுமே நாலுகாலோட தான் நிற்பான். என்ன செய்ய, நம்ம வீடு வீடா பாத்திரம் கழுவி வயிற்றை பார்க்கவேண்டி இருக்கிறது என்று அழுது கொண்டே சொல்வதை கேட்டால் நமக்கே பார்க்க பாவமாக இருக்கும்" என்று சொல்லி கமலா அவள் வேலையை தொடர்ந்தாள்.*

*சில நாட்களுக்கு பிறகு...*

*ரவிக்கு சுகமில்லாமல் ஆஸ்பத்திரிக்கு போனார்கள். காய்ச்சல் கூடுதல் ஆகாரம் சாப்பிட முடியவில்லை, எல்லா டெஸ்டும் செய்தபிறகு தொண்டையில் கான்ஸர் என்று தெரிந்தது, இந்த செய்தி ரவியின் மனைவிக்கு ரொம்ப ஷாக்காக இருந்தது. இதைத் தங்கத்திடம் சொல்லி கமலா அழுத பொழுது."இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை முதலிலேயே தெரிந்து விட்டதல்லவா இப்ப இதற்கு மருந்து இருக்கிறது, குணமாகிவிடும்" என்ற தங்கம் ரூபாயும் கொடுத்தாள்.*

*தங்கம் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி சென்று தன்னால் முடிந்த*

உதவியும் செய்து அவர்களுக்கு ஆறுதலாக இருந்தாள்.

ரவிக்குவந்த கேன்சர் குறித்து சாந்தா வருத்தப்பட்டாலும், தைரியமாக கேன்சர் சென்றருக்கு சென்று டாக்டரிடம் காண்பிக்கவும். பணத்திற்க்கு வேண்டி காருண்யாவில் விண்ணப்பம் கொடுக்கவும், கவுன்சிலரை பார்ப்பதும், தெரிந்தவர்களிடம் இருந்து பணம் கடன் வாங்கியும், ரவியை டாக்டரிடம் காண்பித்து ஆபரேஷன் நடத்தி நல்லபடியாக வீட்டிற்கு கொண்டு வந்தாள். இந்த பிரச்சினையில் அவர்கள் குடும்பம் பட்டபாடு சொல்ல முடியாது. எப்படியாவது ரவியை நல்லபடியா குணமாக்க வேண்டும் என்று மட்டும் தான் அந்த மொத்த குடும்பமும் பாடு பட்டது. உண்மையிலேயே அது ரொம்ப பெரிய காரியம்தான்.

ரவிபேச முடியாமல் வலியால் துடிக்கும் பொழுது அவன் மனைவி உடனிருந்து பார்ப்பது மட்டுமில்லை, அவருக்கு என்ன மருத்துவம் செய்தாலும் அதிக நாள் உயிர் வாழ்வது கஷ்டம் என்று தெரிந்தும் ‘நான் கடன் வாங்கியாவது அவரைநான் நல்ல முறையில் பார்ப்பேன். அவர் இருப்பது வரை தான் எனக்கு பலம், குடிகாரன் ஆனாலும் கணவன் கணவன் தானே, குடிக்காத போது எங்களை நன்றாக பார்க்கத்தானே செய்தார் எனது தலையெழுத்து அவர் வேண்டாதவங்க கூட சேர்ந்து கெட்டு போய் விட்டார். ரொம்ப இளகின மனசுக்காரன் அவர் எங்களையெல்லாம் அன்று கஷ்டப்படுத்தியது பெரிய தப்பு என்று சொல்லி அழும் பொழுது எனக்கு நெஞ்சில் கல்லை தூக்கி வைத்தது மாதிரி இருக்கு’ என்று சொல்லி அழுவாள் சாந்தா. .இவ்வளவு சண்டை போட்டு வீட்டில் பிரச்சினைகளுக்கு காரணமான ரவியை இந்த சாந்தாவும், அந்த குடும்பத்தில் அனைவரும் இப்படி பார்க்கிறார்களே என்று தங்கத்திற்கு அதிசயமாக இருந்தது.

இவ்வாறு இருக்கையில், தங்கத்தின் தாய்மாமன் ரகுவரனும் அத்தை கஸ்தூரியும் அருகில் உள்ள ஒரு பிளாட்டில் இருந்தார்கள். அவர்களுக்கு லோக்கல் கார்டியன் தங்கமும் பாஸ்கரனும்தான். அமெரிக்காவிலுள்ள ஒரே மகன் தினேஷ் இரண்டு அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு முறை மருமகள் சாதனா, பேரன் கார்த்திக், பேத்தி வீணா, எல்லோருமாக வருவார்கள். சாதனா சொந்தத்தில் உள்ள பெண். சொந்தத்தில் பெண் எடுத்தால் வயதான காலத்தில் அவர்களை பார்ப்பார்கள் என்று நினைத்துக் கொண்டார்கள். ரகுவரனுக்கும், மனைவி

*கஸ்தூரிக்கும் குழந்தைகள் என்றாலே கொள்ளை பிரியம். சொந்தப் பிள்ளைகள் என்றால் கேட்கவா வேண்டும். இந்த அளவிற்கு அன்பானவர்களை பார்க்க முடியாது. பேரக்குழந்தைகள் என்றால் உயிரை விடுவார்கள். எப்ப பார்த்தாலும் மகனைப் பற்றியும், பேரப்பிள்ளைகளையும் பற்றி பெருமையாக பேசிக் கொண்டிருப்பார்கள். சாதனா இங்கு வந்தால் காலையில் பத்து மணிக்கு மேல்தான் எழுந்திருப்பாள். ஒரு வாரம் இங்கே முள்ளின் மேல் நிற்பதுபோல் இருந்துவிட்டு அம்மா வீட்டிற்கு பிள்ளைகளைக் அழைத்துக்கொண்டு போய் விடுவாள். கஸ்தூரிக்கு பிள்ளைகளை எண்ணை தேய்த்து குளிப்பாட்டுவது, சடை பின்னுவது, பேரன் பேத்திக்கு ஆகாரம் கொடுப்பது, மகன் இருக்கும் இடத்தில் வந்து குடிக்க தண்ணீர் கொடுப்பது,அவன் குளிக்கப் போகும் முன் டவல் எடுத்து கையில் கொடுப்பது என்று ரொம்ப சந்தோசமாக பம்பரமாக சுழன்று கொண்டிருப்பாள். இதையெல்லாம் பார்க்கும் சாதனா "அத்தே, இப்படி செய்யாதீர்கள், பிள்ளைகளுக்கு ஆகாரம் எடுத்துக் கொடுப்பது சரியல்ல, அவர்களுக்கு தேவை என்றால் தனியே எடுத்து சாப்பிடுவார்கள், அங்கு போனால் யார் இந்த வேலையை எல்லாம் செய்வார்கள், இது நல்லதல்ல. நீங்க உங்க மகனுக்கு செல்லம் கொடுத்து கெடுத்தது போதாதா. அங்கு வீட்டில் பனியன் ஒரு இடம், கார் சாவி ஒரு இடமாக கிடக்கும், காபி குடித்த கிளாஸ் அங்கேயே வைப்பது, லஞ்ச் பாக்ஸ் பைக்குள்ளேயே இருக்கும் எடுத்த இடத்தில் ஒரு பொருளையும் வைக்கத் தெரியாது. இதனால்தான் இங்கு வரவே எனக்கு பிடிக்காது" என்று படபடவென்று பொரிந்தாள் சாதனா*

*இதை கேட்டுக் கொண்டிருந்த கஸ்தூரி"அவனை ஒன்றும் சொல்லாதே, செல்லமாக வளர்த்துவிட்டோம். நாங்கள் இல்லாத போது நீ தினேஷை என்ன வேண்டுமானாலும் சொல், நாங்கள் இருக்கும் போது சொன்னால் எங்களுக்கு வருத்தமாக இருக்கும், தாங்காது" என்று சொல்லி கண் கலங்**கினாள்.***

*நீங்கள் "வருத்தப்படும்படியாக என்ன சொல்லிவிட்டேன், நடப்பதைத் தானே சொன்னேன். தனியே ஒரு காரியமும் செய்யத் தெரியாது, உண்மையை சொல்வதில் என்ன தப்பு" என்று சற்று அழுத்தமாக கேட்டாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ரகுவரன்,"சரிதாம்மா,*

கஸ்தூரிக்கு கொஞ்சம் பாசம் ஜாஸ்தி, சீக்கிரமா உணர்ச்சிவசப்பட்டு விடுவாள், வேற ஒன்னும் இல்ல, பிள்ளைகளை பார்த்தவுடன் அவளுக்கு என்ன செய்கிறோம் என்றே தெரியவில்லை அவ்வளவுதான். இதை எல்லாம் பெரிசா எடுத்துக்காதே" என்று சொல்லி பேச்சை முடித்தார். அப்படி ஒரு வாரத்தில் அவர்கள் சாதனாவின் வீட்டுக்கு புறப்பட்டார்கள். குழந்தைகள் வருத்தத்தோடு டாட்டா காண்பித்து விட்டு சென்றது.

அவர்கள் போனதும் உணர்ச்சிவசப்பட்ட கஸ்தூரி ரகுவின் தோளில் சாய்ந்து அழுத போது அவள் முதுகில் மெதுவாக தட்டிக் கொடுத்து, தலையை வருடிக்கொண்டே,"அவனை நல்ல படிக்க வைத்து, வேலையும் வாங்கிக் கொடுத்தாச்சு. அவன் பிள்ளை, மனைவியோடு சந்தோஷமாக இருப்பதை பார்த்தாச்சு. இனி நமக்கு என்ன வேணும்" என்றதும் கஸ்தூரி "இல்லைங்க, நம்ம என்ன அவளிடம் பணமா கேட்டோம். எனக்கு பென்ஷன் இருக்கு, உங்களுக்கும் பென்ஷன் இருக்கு, தோட்டம் வீடு, வயல் என்று தேவைக்கு இருக்கு, பிள்ளைகள் கூட கொஞ்சம் சந்தோசமாக இருக்கத்தானே ஆசைப்பட்டேன், இது தப்பா, இதைக்கூட இந்தப் பிள்ளைகள் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்களே. சொந்தத்தில் எடுத்தா பாசமா இருக்கும், அனுசரித்து போகும் என்று நினைத்துத் தானே இதெல்லாம் நம்ம செய்தோம்" என்று கடந்தகால நிகழ்ச்சிகளை ஒன்றொன்றாக அடிக்கினாள் கஸ்தூரி

சில நாட்களுக்குப் பிறகு கஸ்தூரிக்கு நிமோனியா வந்து இறந்துவிட மாமா தனியாக பிளாட்டில் இருந்தார். தங்கமும், பாஸ்கரும் அவரை வந்து பார்த்து அவருக்கு வேண்டியதை செய்து கொடுப்பார்கள். அவருக்கு கஸ்தூரியின் பிரிவும், தனிமையும் அவரை வாட்டி, சில வாரத்திலேயே அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்து ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியதாகி விட்டது. டாக்டர் "இது சிவியர் அட்டாக், அவர் வேற ரொம்ப வீக்கா இருக்கிறார், மனதில் ஏதோ கவலை போல இருக்கு, மகனுக்கு சொல்லிவிடுங்கள்" என்றார்.

தங்கத்திற்கு ஒரே வருத்தம். பாஸ்கர், தினேஷை போனில் அழைத்தபோது கிடைக்கவில்லை, சாதனாவிடம் விஷயத்தைச் சொல்ல அவள் "அவருக்கு லீவு கிடைப்பது ரொம்ப கஷ்டம் பார்க்கட்டும் நீங்க மாமாவை நன்றாகப் பார்த்துக் கொள்வீர்கள் எங்களுக்குத் தெரியும். செலவைப் பற்றி பார்க்க வேண்டாம் தந்திடுவோம் அந்த பயம்

வேண்டாம்" என்றாள். மறுபடி ஒன்றும் சொல்லாமல் பாஸ்கர் "எதற்கும் நீ அவனிடம் இரவு அப்பாவைக் கூப்பிட சொல்" என்றார். தினேஷ் இரவு டாக்டரிடம் பேசினான், டாக்டர் சீரியஸ் ஆகி இருக்கிறது என்று சொன்னார். தினேஷ், பாஸ்கரனை அழைத்து "எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது" என்றதும். மாமா "அவர் உன்னையும் குழந்தையும் பார்க்க ஆசைப்படுவது போல் தோன்றுகிறது" என்றதும் "பரவாயில்லை, முடிந்தால் வருகிறேன், ஏதாவது ஆனால் நீங்களே செய்து கொள்ளுங்கள், ஒரு வீடியோ எடுத்து வைத்துக் கொள்ளுங்கள், ஒரு எவிடன்ஸ்க்கு தேவைப்படும். நீங்க வருத்தப்படாதீர்கள், வயது ஆகிறது அல்லவா, நோ பிராப்ளம்" என்றான்.

இதைக்கேட்ட பாஸ்கரனுக்கு நெஞ்சை அடைத்தது போல் இருந்தது பாத்ரூமுக்கு சென்று முகம் கழுவிவிட்டு வந்து மாமாவிடம் "தினேஷ் லீவுக்கு அப்ளை செய்திருக்கிறான் இரண்டு நாளில் வந்து விடுவான்" என்றார். ரகுவரன் அவரைப் பார்த்து ஒரு அர்த்தமுள்ள சிரிப்பு சிரித்தார். அந்தச் சிரிப்பில் எல்லாம் எனக்கு புரிந்தது என்று சொல்வது போல் இருந்தது. ரகுவரன் அவர்களை அருகில் அழைத்து கையை பிடித்து மார்பில் வைத்துகண்ணீர் விட சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது. இதைப் பார்த்த தங்கம் "ஏழைகள் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டாலும் அவர்கள் பாசமுடையவர்களாகவும் நன்றியுடையவர்களாகவும் இருக்கிறார்கள் இங்கு பணம் இருப்பவனுக்கு பாசமும் இல்லை, இரக்கமும் இல்லை. நமக்கும் வயதாகும் என்ற நினைப்பு கூட இல்லையே, பெத்த தகப்பனை பார்க்க முடியாதவன் ஒரு பிள்ளையா" என்று வாய் விட்டு கதறி அழுதாள்.

பாஸ்கரன் ஒன்றும் சொல்லாமல் முகத்தை துடைத்துக் கொண்டு இறுதிச் சடங்கு வேலையை தொடர்ந்தார்.

**2020, மே மாத நன்கொடையாளர்கள்**

***திருவாளர்கள்:***

| | |
|---|---|
| ***உ. இராமநாதன்*** | ***ரூ.2000/-*** |
| ***முனைவர் எஸ். மோதிலால் நேரு*** | ***ரூ. 2000/-*** |
| ***A.முத்துப் பெருமாள் .*** | ***ரூ.1000/-*** |
| ***கடுக்கரை இராமையா.*** | ***ரூ.200/-*** |

***நாஞ்சில் மலர் வளர்ச்சிக்கு உதவிய அன்பர்களுக்கு நன்றி !***



# “என்றும் மனதில் ”

தேரூர் மு.கோபி

**த**ங்கப்பன் அண்ணாச்சி அப்பாவின் நண்பர். சிகப்பா வாட்ட சாட்டமா உயரமாக இருப்பார். பஸ் ஸ்டாண்ட் எதிரே கிருஷ்ணா டெய்லரிங் கடை ஒன்று இருந்தது. அப்பாவின் சித்தப்பா கடை..பலரும் வருவார்கள் கூடுவார்கள். மணிக்கூர் கணக்கில் பேசி கொண்டிருப்பார்கள். அப்பாவிற்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது அங்குதான். ஓரளவு நரைத்த முடி, ஏந்தி சீவிய தலை முடி. மப்டி போலீஸ் போல காணப்படுவார். அச்சு எந்திரம் பழுது பார்க்கும் வேலை; வாங்கி விற்கும் வேலை பார்த்து வந்தார்.

சில சமயம் மாதக்கணக்கில் பார்க்க முடியாது. அச்சு எந்திரம் விஷயமாக சிவகாசி போன்ற வெளி ஊர்களுக்கு போய்விடுவார். பஸ் பயணத்தின் போது இறங்குவது வரை நடத்துனர் பாக்கி பணம் திருப்பி தரவில்லையாம். இறங்கும் போது “ தங்கச்சிக்கு பூ வாங்கிட்டு போங்க மச்சான்” என்றிருக்கிறார் .நகைசுவை உணர்வு கொண்டவர்.

கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. ஒரு பெண் அவர் விட்டில் வசித்து வந்தாள். அவள் அப்படி ஒண்ணும் அழகில்லை. கருகருவென ஓட்டடைகுச்சு போலிருப்பாள். அவள் குலம் கோத்திரம் யாருக்கும் தெரியாது

“எங்க பிடிச்சீங்க” என கேட்டால்

“சனியை நாம பிடிப்பமா அது தான் நம்மை பிடிக்கும்”
அவளை அருகில் வைத்து கொண்டே அப்படி பதிலளிப்பார்.

வருமானம் எவ்வளவு என்று தெரியாது, ஆனால் குடும்பத்தை அழகாக நடத்தி வந்தார். வீட்டில் அவர்கள் இருவர் மட்டுமே. குழந்தைகள் ஏதும் கிடையாது. வீடு என்று சொல்வதை விட

குடிசை என்று சொல்வது தான் மிகச் சரியானது. செம்மாங்குடி ரோட்டில் நெருக்கடியான கடைகளுக்கு இடையே இருந்தது அந்த குடிசை. குடிசை உள்ளே கிடுவு வைத்து மறைத்து அடுக்களை இருந்தது.

"நான் குடிக்கிற கஞ்சில பாதிய அது குடிக்கும்." என்பார்.

"உங்க கூட இருக்கிற பெண் யாரு? "

அவருடன் உரிமையோடு பழகுபவர்கள் நச்சரிப்பார்கள். இவர் சிரித்துக் கொண்டே இருப்பார்.

"மனதில் இருக்கும்ரகசியம் மதி கெட்டவன் வாயில... நான் மதி கெட்டவனில்லை"

சில சமயம் இப்படியும் பதிலளிப்பார்

அவருடைய அண்ணன் சண்டியர். எழுபது வயதிலும் அவ்வாறே திரிந்தார் இளவயதில் சண்டியராக இருக்க முடியும். வயதான காலத்திலும் அவ்வாறு திரிந்தார்.பல வகைகளில் பணம் சம்பாதித்து வந்தார் பலரும் மரியாதை கலந்த பயத்துடன் அவரை கண்டு நடுங்குவர். அப்படி பட்ட தோற்றம். அருவா மீசை தடித்த குரல்; பயப்படும் படியான பார்வையோடு காணப்படுவார். பஸ் ஸ்டாண்டில் பல கடைகள் வைத்திருந்தார்.கடைக்கார்கள் பஸ் ஸ்டாண்டில் எதுவானாலும் அவரிடம் ஒரு வார்த்தை கேட்டுதான் செய்வார்கள். அந்நிலையில் பஸ் ஸ்டாண்டில் கடை வைக்க வாய்ப்பு கிடைத்தது. யாராவது அடாவடி பண்ணி தடுக்க முனைவார்களோ என பயம் மனதை கவ்வியது.. யார் சொன்னாலும் சண்டியர் செவி சாய்க்க மாட்டார். என்ன செய்வது என குழம்பி தவித்த நிலையில் அண்ணாச்சி நினைவுக்கு வந்தார். அவர் சண்டியருக்கு தம்பி முறை.

அப்பாவின் நண்பரின் வீடு வடிவீஸ்வரத்தில் இருந்தது அங்கு வைத்து பிளைவுட்டால் பெட்டி கடை தயாரானது. தகரம் மூலம் கூரை வேயப்பட்டது. மடவளாகம் ஆசாரி அதை வாக்காக

அமைத்திருந்தான். இரவு பத்து மணிக்கு மேல் டெம்போவில் ஏற்றி பஸ் ஸடாண்ட்டில் இறக்கி வைக்கப்பட்டது. அப்பா, நான், அண்ணாச்சி முவரும் அருகே உட்கார்ந்திருந்தோம். யாராவது வந்து இடையூறு பண்ணிவிட கூடாதென்று விழிப்புடன் இருந்தோம்.

“அதோ அண்ணன் வர்றாரு“

சண்டியர் வருவதை அண்ணாச்சி தான் முதலில் சொன்னார்.நள்ளிரவு பன்னிரண்டு மணி இருக்கும்.எதிர் பக்க நடைபாதையில் வேகமாக நடந்து வந்தார்.விடு நோக்கி போகிறார் என புரிந்து கொண்டோம்.

“அனுமதி பெற்று தான் வைக்கிறோம் ஆனாலும் ஏதேனும் பிரச்சனை பண்ணுவாரோ?” அப்பா கேட்டார்.

“பார்ப்பம்.”

அண்ணாச்சி யோசனையோடு பதில் சொன்னார்.

